**நுவரெலியா மாநகர சபை - 2020**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நுவரெலியா மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நுவரெலியா மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையின் 1.6.1 (அ) பந்தியின் அவதானிப்பு தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் சுட்டிக் காண்பித்த 1.2.2 (ஆ), (ஈ) ஆம் இலக்க ஆன கணக்கீட்டுக் குறைபாடுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெளிப்படுத்தலாக அடுத்த நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வு பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன்.2021 ஆம் ஆண்டில் கணக்குகளில் சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டின் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது இத்தவறுகளை இனங்கண்டு சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | நாட்குறிப்பு 22 மூலம் முன்னைய ஆண்டிற்காக ரூபா 944,563 ஆன பெறவேண்டிய முதலீட்டு வட்டிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதும் பேரேட்டுக் கணக்கில் அப்பெறுமதி அவதானிக்கப் படாமையால் கணக்கு சமப்படுத்தப்பட்ட முறை கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்படவில்லை. | பேரேடு நாட்குறிப்பு இலக்கத்தை பதிவுசெய்யும் போது ஏற்பட்ட தவறொன்று காரணமாக கணக்கு சமப்படுத்தப்பட்ட முறையில் தெளிவற்ற தன்மையொன்று உருாகியிருந்தது. | அடுத்த ஆண்டின் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது இத்தவறுகளை சீராக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 07 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா 8,128,426 தொகை கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்ததுடன் 3 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா 23,953,355 தொகை கூடுதலாகவும் 2 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா 25,850 கணக்குகளில் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்பு தொடர்பாக இணங்குவதாக அறிய தருகின்றேன் | அடுத்த ஆண்டின் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது இத்தவறுகளை சீராக்க வேண்டும். |
| (ஈ) | மாநகர சபைக்கு நன்கொடையாக 1980 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை கிடைத்திருந்த 17 மோட்டார் வாகனங்களை மீளாய்வாண்டு வரை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு தொடர்பாக இணங்குவதாக அறிய தருகின்றேன் | அடுத்த ஆண்டின் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது இத்தவறுகளை சீராக்க வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 4 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதி மற்றும் அட்டவணைகளின் பிரகாரம் மீதிகளுக்கு இடையே ரூபா 1,301,560 ஆன வேறுபாடு ஒன்று இருந்தது. | அறிக்கையின் பந்தியுடன் இணங்குகின்றேன். | வேறுபாடுகள் ஒப்பிடப்பட்டு கணக்குகளில் தேவையான சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட 4 கணக்கு விடயங்களுக்குரிய மொத்தம் ரூபா 45,392,761 ஆன உறுதிச்சீட்டுக்கள், உறுதிப்படுத்தும் ஆவணங்கள், அட்டவணைகள் மற்றும் உரிய கோவைகள் இல்லாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | உரிய விபரங்கள், கோவைகள், உறுதிப்படுத்தும் ஆவணங்கள் என்பவற்றை எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்குகும் எதிர்காலத்தில் முறையான வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கும் களஞ்சியத்திற்கு பொறுப்பான முகாமைத்துவ உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்விற்கு தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

**1.7 இணங்காமைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பாராளுமன்ற சட்டங்கள் | | | |
| I | மாகர சபை கட்டளைச் சட்டம் 187 ஆம் பிரிவு | தனியார் வணிக வங்கியொன்றில் நிலையான வைப்புக்களில் ரூபா 6,254,301 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. | கொடுக்கல் வாங்கல் தொடர்பான அங்கீகாரங்கள் கணக்காய்விற்கு எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும் | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| i. | XIX ஆம் அத்தியாயம் | | | |
| | • 6.1. ஆம் பிரிவு | ஏதேனுமொரு பதவிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடொன்று தவிர ஏனைய அனைத்து வீடுகளின் குத்தகை காலம் 05 ஆண்டுகளாக இருந்த போதும் அந்நியதிகளை கருத்திற் கொள்ளாமல் அட்டணைப்படுத்தப்படாத 12 வீடுகள் 08 ஆண்டு முதல் 28 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்காக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. | குறிதத் உத்தியோகத்தர்களுக்கு 202 மார்ச் 02 ஆந் திகதி எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | தாபனவிதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | • 6.14 மற்றும் 7.1 ஆம் பிரிவுகள் | மூன்று உத்தியோகத்தர்கள் சபையிலிருந்து இடமாற்றம் பெற்றுச் | தற்போது இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த உத்தியோகத்தர்கள் | தாபனவிதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சென்றிருந்த போதும் வீடுகளை மீள ஒப்படைத்திருக்க வில்லை. | உத்தியோகபூர்வ வீடுகளை கையளிக்க உள்ளனர் | வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| I | நிதிப்பிரமாணம் 371 | | | |
| a | (2)(ஆ) பிரிவு | 02 ½ வருட. முதல் 07 வருடங்கள் வரையான காலவீச்சு கடந்திருந்த நகர சபை உத்தியோ கத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த தீர்வுசெய்யப்படாத 12 முற்பண மீதிகள் காணப்பட்டன. 2021 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை அதில் ரூபா 170,000 தொகை மாத்திரம் தீர்வு செய்யப்பட்டிருந்தன. | முற்பண்தை தீர்வு செய்வதற்கு உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| b | 05 ஆம் பிரிவு | அரச நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,525,000 ஆன முற்பணங்கள் ஆன முற்பணங்கள் 2021 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை தீர்வு செய்யப்பட்டிருக்க வில்லை. | பொருட்கள் கிடைக்காமையால் முற்பணம் தீர்வுசெய்யப்பட வில்லை | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| II | நிதிப்பிரமாணம் 571(2) | 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 3,708,441 பெறுமதியான 92 வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக மாநகர சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 125,474,515 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 134,594,992 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதியில் திகதி வீத வரி நிலுவை ரூபா 77,163,577 ஆக இருந்தது. அவ்வாண்டில் பட்டியலிடலான ரூபா 63,357,784 இற்கு ஒப்பாக 122 சதவீதமான கூடிய பெறுமதியொன்றை கொண்டிருந்தது. ஆண்டின் பட்டியலிடலில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 31,023,637 ஆக இருந்தது. ஆண்டின் ஆரம்பத்தில் நிலுவை வீத வரி ரூபா 60,816,292 ஆக இருந்ததுடன்அதில் ஆண்டின் போது அறவிடல் ரூபா 11,547,857 ஆக இருந்தமையால் ரூபா 49,268,435 ஆன நிலுவையொன்று 01 ஆண்டு முதல் 30 ஆண்டுகள் வரையான காலவீச்சிலிருந்து காணப்பட்ட போதும் வருமான சேகரிப்பு உத்தியோகத்தர்களின் சேவை செயற்திறனற்றதாக இருந்தது. | குறித்த அறிக்கையை தயாரித்து நிதிச் செயற்குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு வருமான பரிசோதகர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் 2022 ஆம் ஆண்டின் போது சிவப்பு அறிவித்தல் அனுப்பு வதற்கு எதிர்பார்த்துள்ள தாக அறிவிக்கப்பட்டிருந்தது. | தாமதமின்றி நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டண அளவு ரூபா 24,849,901 ஆக இருந்ததுடன் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக இருந்த 119 நீர் பாவனையாளர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொக ரூபா 2,574,782 ஆக இருந்தது. 1303 நீர் பாவனையாளர்களிடமிருந்து 1 முதல் 5 ஆண்டுகள் வரை அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 9,468,385 ஆக இருந்தது. | எதிர்காலத்தில் நீர் இணைப்பினை துண்டிப்பதற்காக செயற்பாட்டுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது | தாமதமின்றி நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 32,213,164 ஆன கடை வாடகையில் 41 சதவீதம் அதாவது ரூபா 13,304,026 தொகை 05 ஆண்டு முதல் 30 ஆண்டுகள் வரை ீண்டகாலமாக | 2021 ஆகஸ்ட் 25 ஆந் திகதி வாச வரி முடிவுறுத்தும் அறிவித்தல வழங்கி கட்டணங்கள் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. | தாமதமின்றி நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 139 கடன்கொடுத்தோரிடமிருந்து அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. | | |
| (ii) | ஜேம்ஸ் வீதியின் வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தை நிறைவேற்றும் போது 2004 ஆம் ஆண்டின் போது உடைத்து அகற்றப்பட்ட 05 வீடுகளுக்காக 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 1,957,000 ஆன வீட்டு வாடகை நிலுவையாக காணப்பட்டது. | சபை தீர்மானத்தின் பிரகாரம் குழு பரிந்துரை வழங்குவதற்கு எதிர்வரும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தாமதமின்றி நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கேள்வி மீதான குத்தகை வழங்கலில் இருந்து பெறவேண்டிய தொகை ரூபா 13,386,469 ஆக இருந்தது. அதில் ரூபா 2,650,659 தொகை 1 வருடம் முதல் 5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட வீச்சிலிருந்து அறவிட வேண்டியதாக இருந்ததுடன் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா 1,784,026 ஆக இருந்தது. | அறிக்கை தயாரிக்கப்பட்டு நிதி செயற்குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு வருமான பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | தாமதமின்றி நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ)** | **அனுமதிப்பத்திரக் கட்டணம்** | | |
| | 558 வருடாந்த அனுமதிப் பத்திரங்களுக்காக மீளாய்வாண்டில் பட்டியலிடல் ரூபா 5,029,947 ஆக இருந்த போதும் அதில் ரூபா 329,740 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. வருடாந்த காணி அனுமதிப் பத்திரங்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 11,303,115 ஆக இருந்ததுடன் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 15,165,412 வரை 34 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. | காணியின் தற்போதய நிலைமை மற்றும் உரித்து தொடர்பாக உறுதிப்படுத்துவதற்காக சகல கோவைகளையும் வெளிக்கள பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும் | தாமதமின்றி நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஈ)** | **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்** | | |
| | மாகாண சபையின் தலைமை செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் அறவிடப்பட வேண்டிய் நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 459,142 தொகையும் முத்திரைக் கட்டணம் ரூபா 31,089,108 ஆக இருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | தாமதமின்றி நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(உ) **ஏனைய வருமானம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | கிரகெரி குளத்தின் படகு சேவை ஆரம்பத்திலிருந்து 2021 ஏப்ரல் 30 ஆந் திகதி வரயான காலப்பகுதியில் 40 பகு உரிமையாளர்களிடமிருந்து ரூபா 15,987,248 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. அதில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவை மீதிகள் ரூபா 9,734,854 மற்றும் 1 ஆண்டிற்கும் 3 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட கடன் கொடுத்தோர் மீதி ரூபா 4,509,813 ஆக இருந்தது. | நிலுவைத் தொகைகளை செலுத்தி முடியும் வரை படகு சேவை நிறுத்தப்பட்டுள்ளது. | தாமதமின்றி நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | கிரகெரி குளத்தின் ஹெலிகொப்டர் தரை இறக்குவதற்காக அரசின் அங்கீகரிக்கப்பட்ட வரித் தொகையான ரூபா 5,000 மற்றும் விற்பனை செய்யப்படும் நுழைவுச் சீட்டுக்களின் பெறுமதியில் 10 சதவீதம் வினோத வரியாக மாநகர சபையின் நிதியத்தில் வைப்புச் செய்ய வேண்டிய போதும் வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகளின் பிரகாரம் நுழைவுச் சீட்டுகளை விற்பனை செய்வதற்கு முன்னர் மாநகர சபைக்கு சமர்ப்பித்து 10 சதவீத வைப்புத் தொகை வைப்புச் செய்யப் பட்டிருக்கவில்லை. ஹெலிகொப்டர்களை தரை இறக்கும் காலப் பகுதியில் வழங்கப்படும் நுழைவுச் சீட்டு எண்ணிக்கை தொடர்பாக நாளாந்தம் பரீட்சிப்பு இடம்பெறவில்லை. | வருமான பரிசோதக உத்தியோகத்தர்கள் மற்றும் நுழைவுச்சீட்டு காப்பாளர்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. அதன் செயன்முன்னேற்றம் எதிர்வரும் காலங்களில் கணக்காய்விற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நாளாந்தம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதான மதிப்பீட்டாளரின் 2003 பெப்ரவரி 27 ஆந் திகதிய | உருவான எதிர்ப்பு காரணமாக இவ்வாறு | சபை நிதியத்திற்கு நட்டமொன்று |

| | | | |
|---|---|---|---|
| | விலை மதிப்பீடு மற்றும் மத்திய மாகாண விலை மதிப்பீட்டாளரின் 2019 ஆகஸ்ட் 21 ஆந் திகதிய கடை வாடகை மதிப்பீடு தொடர்பாக கடை உரிமையாளர்கள் மற்றும் மாநகர சபை உறுப்பினர்களின் எதிர்ப்பு காரணமாக புதிய மதிப்பீட்டு வாடகையை அறவிடாமையால் 2003 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை மாநகர சபைக்குஇழக்கப்பட்டுள்ள ஒட்டுமொத்த வருமானம் ரூபா 254,786,700 ஆக இருந்தது. | இடம்பெற்றுள்ளது. | ஏற்படாமல் தீர்மானங்கள் எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 756 இன் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொண்ட பொருள் மெய்மையாய்வு பரிசோதனையின் பிரகாரம் பொது களஞ்சியத்தில் 103 உருப்படிகளின் 15793 அலகுகள் பற்றாக்கறையாக காணப்பட்டன. களஞ்சிய பற்றாக்குறைகளின் முகப்புப் பெறுமதி ரூபா 1,644,240 ஆன வெவ்வேறு பொருள் பற்றுச்சீட்டுப் புத்தகங்கள், டிக்கட் புத்தகங்கள் காணாமல் போன 33 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் பரிசோதனை மேற்கொண்டு அறவிடுவதற்கு இருந்தால் நிதிப் பிரமாணம் 105 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | இருப்பு பற்றாக்குறை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபையின் கடன் கொடுத்தோர் பதிவேட்டின் பராமரிப்பு மற்றும் பேணிச் செல்லல் மிகவும் பலவீனமான நிலைமையில் காணப்பட்ட காரணத்தினால் சரியான கடன்கொடுத்தோர் மீதியை இனங்காண முடியாதிருந்தது. சமர்ப்பிக்கப்பட்டிருந்த பொது வழங்கல் கடன்கொடுத்தோர் அட்டவணையின் பிரகாரம் 2017 முதல் 2019 வரையான 150 பொது வழங்கல் கடன் கொடுத்தோர் களுக்கான மொத்தம் ரூபா 2,124,902 ஆன மீதி 01 ஆண்டு முதல் 03 ஆண்டுகள் வரையான காலப்பகுதியொன்று கடந்திருந்த போதும் இனங்காணப்பட்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அட்டவணைகள் சமர்ப்பிக்கும் போது தவறான அட்டவணை யொன்று உள்ளடக்கப் பட்டிருந்ததுடன் அதன் மூலம் கடனில் திருத்தம் இல்லையென தயவுடன் அறிய தருகின்றேன். | தாமதமின்றி நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் பதிவேடுகள் நாளதுவரையாக பேணிச்செல்வதற்கு நடவடிககை ஏடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 ஆண்டுகளை மிகைத்திருந்த தீர்வுசெய்யப்படாத முற்பண மீதி ரூபா 1,359,500 தொகையை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முற்பணத்தை தீர்வு செய்வதற்கு உரிய தரப்பினரை அறிவூட்ட வேண்டும். | தாமதமின்றி தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 29 அரச துறை கணக்குகள் மற்றும் 431 தனியார் கணக்குகள் காணப்பட்டன. செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளில் மொத்தம் 74,596,266 ஆக இருந்ததுடன் அதில் ஓராண்டு கடந்த ரூபா 16,663,205 ஆன மாகாண ஓய்வூதிய பங்களிப்பு தொகை கணக்கின் மீதி மற்றும் 155 தனியார் கணக்குகளில் ரூபா 4,430,793 ஆன 156 மீதிகள் காணப்பட்டன. 2021 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறு இதில் 28 அரச துறைக் கணக்குகள் மற்றும் 242 தனியார் துறைக் கணக்குகளின் மீதிகள் ரூபா 35,179,767 தீர்வுசெய்யப்பட்டிருந்ததுடன் மேலும் அரச துறை கணக்கொன்றில் ரூபா 16,899,043 ஆன மீதியொன்றும் 188 தனியார் துறை கணக்குகளில் ரூபா 22,217,458 ஆன மீதிகளும் செலுத்த வேண்டியிருந்தன. | தீர்வு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | தாமதமின்றி தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

### 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 அம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் மதிப்பீட்டு வாடகை ஆகக்குறைந்தது 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான 463 கடைகளுக்கு இறுதியாக 2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு 2020 ஆம் ஆண்டு வரை செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை. | உருவான எதிர்ப்பு காரணமாக இவ்வாறு இடம்பெற்றுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாநகர சபை மற்றும் கடை உரிமையாளர்களுக்கு இடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை II (2) இணக்கப்பாட்டின் பிரகாரம் கடைகளை உப குத்தகைக்கு வழங்க முடியாத போதிலும் 90 கடைகள் உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டன. உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் 2016 ஆகஸ்ட் 15 ஆந் திகதிய 2016/03 ஆம் இலக்க சுற்றிக்கையின் பிரகாரம் கடை உப குத்தகைக்கு வழங்கியிருக்கும் சந்தர்ப்பத்தில் 120 மாதங்களின் வாடகையை பெற்று உப குத்தகையாளருக்கு உரித்தினை கையளிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த போதும் உப குத்தகைக்கு வழங்கிய எந்தவொரு கடையினதும் உரித்தினை மாற்றுவதற்கு 2021 ஏப்ரல் 28 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் ஆலோசணையின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | உப குத்தகையாளருக்கு உரித்தினை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | விக்டோரியா பூங்காவின் புதிய சிற்றுண்டிச்சாலையை நடாத்திச்செல்லல் வருடாந்தம் 10 சதவீத அதிகரிப்பின் பேரில் 2011 மார்ச் 15 ஆந் திகதி முதல் 10 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு 2011 ஆம் ஆண்டின் போது நடைபெற்ற பொதுச் சபையின் போது தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அத்தீர்மானத்தின் பேரில் சிற்றுண்டிச்சாலை வருடாந்தம் திறந்த பெறுகைக்கு அனுப்புதல் கடந்த 10 ஆண்டுகளாக இடம்பெறவில்லை. அவ்வாறே இந்த குத்தகையாளர் 2017 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 2,241,319 ஆன தொகையை நிலுவையாக வைத்திருந்த போதும் சபையால் இந்த குத்தகையாளருக்கு எதிராக எந்தவொரு சட்ட நடடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை. | குறித்த நிலுவை தொகையை அறவிடுவதற்கு சட்ட நடடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன . | சட்ட நடடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் |
| (ஈ) | ஹாவாஎலிய உடுபுஸ்ஸல்லாவ வீதியில் அமைந்துள்ள 06 ஏக்கர் 35.2 பேர்ச் அளவிலான காணி ஆடைத் தொழிற்சாலையொன்றை நடாத்திச்செல்வதற்கு தனியார் கம்பனியொன்றுடன் 1982 ஆகஸ்ட் 1 திகதியிலிருந்தும் அதற்கு அண்மையில் அமைந்துள்ள 02 ரூட் 34.8 பேர்ச் அளவிலான காணியில் செயற்கையாக உற்பத்தி செய்வதற்கு தொழிற்சாலை யொன்றை நடாத்திச் செல்வதற்காக மற்றுமொரு தனியார் கம்பனிக்கு 1984 | பொதுச் சபை தீர்மானமொன்றின் பிரகாரம் குழு வொன்று நியமிக்கப் பட்டுள்ளதுடன் அத்தீர்மானத்தின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அனைவருக்கு சமமான அடிப்படையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதுடன் வருமானங்களை இழத்தல் தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந் து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மார்ச் 24 ஆந் திகதியிலிருந்து குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. ஒரே சமமான அண்மையில் அமைந்துள்ள சமமான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளை நடாத்தி செல்வதற்காக இரண்டு துண்டு காணிகளுக்காக ஒரு காணி துண்டு ரூபா 21,637 வீத குத்தகை தொகையும் மற்றைய காணிக்காக ஒரு பேர்ச்சிற்கு ரூபா 1,788 ஆன குத்தகை தொகையும் தீர்மானித்த காரணத்தினால் வருமான அறவீட்டில் சகல தரப்பினரிடமிருந்து நியாயமொன்ற நிறைவேற்றப்படும் வகையில் சமமான அடிப்படையில் செயற்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | விவசாயத் திணைக்களத்தின் உள்ளாட்டு உணவுச்சாலையொன்றை நிமாணிப்பதற்காக விக்டோரியா பூங்காவின அண்மித்ததாக அமைந்துள்ள 21.55 பேர்ச் அளவிலான காணித் துண்டொன்று 2016 ஆம் ஆண்டின் போது குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதும் குத்தகையாளருடன் முறையாக குத்தகை உடன்படிக்கை மேற்கொள்ளப்படாத காரணத்தினால் எவ்வித குத்தகை வாடகையொன்றும் இதுவரை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | உடன்படிக்கையின் திருத்தங்கள் இப்போது நடைபெறுகின்றன. | உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் இதற்கு பொறுப்பான உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | ஒரு ஏக்கர் அளவிலான பம்பரகலே கற் குழி மற்றும் 2008 திசெம்பர் 24 ஆந் திகதி வருத்திற்கு ரூபா 26,500 தொகைக்கு வியாபாரி ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. குத்தகை உடன்படிக்கையின் இரண்டாவது உப பிரிவின் பிரகாரம் உடன்படிக்கை காலம் 2012 திசெம்பர் 24 ஆந் திகதி முடிவடைந்த போதும் கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கோவைகள் இலஞ்சம் மற்றும் மோசடி புலனாய்வு ஆணைக்குழுவிற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசோதனைகள் நடைபெறுகின்றன. | சபை நிதியத்திற்கு நட்டமொன்று ஏற்படாத வகையில் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் |
| (எ) | அரசுடைமையாக்கப்பட்ட காணி தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 217 ஆம் பிரிவின் பிரகாரம் குடியிருப்பதற்காக காணி குத்தகைக்கு வழங்கும் போது காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியில் 4 சதவீதம் வருடாந்த குத்தகையொன்று அறவிட முடியுமான போதும் அவ்வாறு அறவீடுகள் மேற்கொள்ளாமல் 2017 ஆகஸ்ட் 25 ஆந் திகதிய | அவதானிப்புடன் இணங்குகின்றேன். எனினும் 10 பேர்ச் இற்கு குறைந்த கிராம சேவையாளர் மதிப்பீடொன்றும் 10 பேர்ச்சிற்கு மேற்பட்ட காணிக்கு பிரதான விலை மதிப்பிட்டாளரின் | சபை நிதியத்திற்கு நட்டமொன்று ஏற்படாத வகையில் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| ஆணையாளரின் தீர்மானத்தின் பிரகாரம் காணியின் அமைவின் படி அவதானிக்கப்பட்ட பெறுமதியொன்று அறவிடப்பட்டிருந்தது. | மதிப்பீடொன்றை பயன்படுத்த நிதிக் குழு பரிந்துரைத்துள்ளது. | |

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மாநகர கட்டளைச் சட்டத்தின் 252 ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனங்கள் தடைசெய்யப்படும் என அறிவிக்கும் கடிதங்கள் கையொப்பமிடப்பட்டிருந்த போதும் அக்கடிதங்களை உரிய ஆட்களுக்கு கையளிக்கப்படாத 14 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | ஆதன உரித்தாளர்களினால் அந்த ஆதனங்களின் பெயர்களை மாற்றுவதற்காக உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை | ஆதனங்களை தடைசெய்வதாக அறிவிக்கும் கடிதங்களை உரிய நபர்களுக்கு தாமதமின்றி வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) நிலுவை வருமானங்களை அறவிடுவதற்காக வருடாந்தம் மாநகர ஆணையாளரால் குத்தகையை நிறைவு செய்யும் அறிவித்தலில் கையொப்பமிட்டு வருமான பரிசோதகருக்கு வழங்கப்பட்டிருந்த போதும் அவர்களால் அந்த அறிவித்தலுக்குரிய கடை உரிமையாளர்களுக்கு வழங்கப்படாத 94 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | போலியாக பட்டியலிடப்படும் கடைகளுக்கான அறிவித்தலாக இருந்தன.. | குத்தகையை நிறைவு செய்யும் அறிவித்தலை உரிய நபர்களுக்கு தாமதமின்றி வழங்கப்பட வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நுவரெலியா கிரேன்ட் ஹொட்டெல் வீதியில் அமைந்துள்ள 01 ரூட் 31.4 பேர் ஆன காணி பகுதி 1979 செப்தம்பர் 01 ஆந் திகதி முதல் ஓராண்டு காலப்பகுதிக்காக நபரொருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. குத்தகை காலம் முடிவடைந்ததன் பின்னர் உடன்படிக்கை புதுப்பிக்கப்படாதிருந்ததுடன் 2012 வரை வருடாந்தம் ரூபா 6,000 ஆன குத்தகை தொகை அறவிடப்பட்டு குத்தகை இடத்தின் பரப்பளவினை விட கூடிய காணியொன்றை குத்தகையாளரால் உடமை கொள்ளப்பட்டிருந்த போதும், மாநகர சபையால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆளுனரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு செயற்திறனான செயற்பாடொன்றுக்கு குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதமின்றி கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2020 ஒக்தோபர் 19 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது கிரேன்ட் | உரித்தினை கையேற்க சட்ட ரீதியான நடவடிக்கை | தாமதமின்றி கையேற்பதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| ஹொட்டெல் வீதி ஹில் கிளப் முன்னால் 10 இலக்க காணியை சுற்றி மாநகர சபையால் பாதுகாப்பு வேலியொன்று நிர்மாணிக்கப்பட்டு பாதுகாப்பு உத்தியோகத்தரொருவர் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதும் காணியில் அனுமதியின்றி பயிரிடப்பட்டு அங்கு தற்காலிக வீடொன்றில் குடும்பமொன்று குடியிருந்தது. | எடுக்கப்படும். | எடுத்தல் வேண்டும். |

## 3.6 செயற்திட்டங்கள் இலக்குகள் அல்லது மூலதன வேலைகளின் தாமதங்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| குட்டி இங்கிலாந்து என்னும் பெயர் கொண்டு அழைக்கப்படும் நகரத்தைக் கண்கவர் மற்றும் வர்த்தக, சுற்றுலா நகராக அபிவிருத்தி செய்யும் நோக்கில் வீடு மற்றும் 03 வர்த்தக கட்டடங்கள், வாகனத் தரிப்பிடம் உள்ளடங்கலான 07 மாடிகளைக் கொண்ட 03 நிர்மாணங்களை மேற்கொள்வதற்காக 2016 ஜுன் மாதம் 29 ஆம் திகதி மாநகர சபை மற்றும் அரசிடம் பங்குகளைக் கொண்டுள்ள தனியார் கம்பனி ஒன்றுடன் 03 ஆண்டுகளில் பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப் பட்டிருந்தது. கம்பனியின் பணத்தில் கட்டிடத்தை நிர்மாணித்து அதில் விற்பனையால் கிடைக்கும் வருவாயில் குறித்த நிர்மாணிப்புக்கென செலவிட்ட தொகையை மீளப் பெறுவதற்கும், நகரசபைக்கென சபைக் காரியாலயம், சந்தை இடம் மற்றும் வாகன தரிப்பிடம் என்பவற்றை வழங்குவதற்கும் உடன்பாடு காணப்பட்டிருந்தது. அந்த வகையில் 2018 மே மாதம் 15 ஆம் திகதியாகும் போது குறித்த நிறுவனம் குறித்த நிர்மாணித்தின் ஆரம்பகட்ட செலவுகளுக்காக ரூபா 10,954,477 ஐ செலவிட்டிருந்த நிலையில் 2018 மே மாதம் 15 ஆம் திகதி மாநகர சபையானது குறித்த ஒப்பந்தத்தை இரத்து செய்து குறித்த நிறுவனம் அல்லது மற்றொரு புதிய முதலீட்டாளரொருவரை இணைத்து சபைக்கு உயர் பலன்கள் கிடைக்க கூடிய வகையிலான புதியதொரு ஒப்பந்தத்தை மேற்கொள்ள தீர்மானித்தது. குறித்த ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு மூன்று வருடங்கள் கடந்த நிலையிலும் குறித்த நிர்மாணப் பணிகளை மீள் ஆரம்பிப்பதற்கான போதுமான செயற்பாடுகள் எவையும் 2021 மே மாதம் வரை நடைபெறவில்லை என் அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் காணிப் பகுதியை பொறுப்பேற்று மீண்டும் செயற்படுத்து வதாக | மீண்டும் செயற்படுத்தி நோக்கங்களை நிறைவேற்ற வேண்டும் |

**3.7 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டுக்கான வழங்குனர்களைப் பதிவு செய்வதற்கான விளம்பரம் 2019 ஒக்டோபர் 7 ஆம் திகதி பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்ததோடு விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினமாக 2019 ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. போதுமான அளவு வழங்குனர்கள் பதிவு செய்யப்படாத நிலையில் நிதி செயற் குழுவானது விண்ணப்ப முடிவுத் திகதியை நவம்பர் மாதம் 25 வரை நீடித்திருந்த நிலையில், குறித்த விண்ணப்பபடிவம் கோரப்படுகின்ற அனைத்து தரப்பினரையும் இதுதொடர்பில் அறிவூட்டுவதற்கான செயற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றேன். 2021 ஆம் ஆண்டின் பெறுகை செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது இக்குறைபாடுகளை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் | பெறுகை சட்டங்கள், விதிகள் பிரமாணங் களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1989 ஜனவரி 20 ஆம் திகதிய 541/17 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற உப விதி மூலம் 3(அ) 1 இன் பிரகாரம் விலைமனுக் கோரல்களின் போது பதிவு செய்யப்பட்ட அனைத்து வழங்குனர்களிடமிருந்தும் விலை மனுக்கள் கோரப்பட வேண்டிய போதிலும் ரூபா 6,688,653 பெறுமதியான 14 விலைமனுக் கோரல் சந்தர்ப்பங்களின் போது பதிவுசெய்யப்பட்டிருந்த அனைத்து வழங்குனர் களிடமிருந்தும் விலை மனுக்கள் கோரப்பட்டிருக்க வில்லை. | அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றேன். 2021 ஆம் ஆண்டின் பெறுகை செயற்பாடுகளை மேற் கொள்ளும் போது இக் குறைபாடுகளை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் | பெறுகை சட்டங்கள், விதிகள் பிரமாணங் களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.6 ஆம் பிரிவின் படி முதலாவது ஒப்பந்தம் ஒன்றினை வழங்கி ஆறு மாதங்களுக்குள்ளால் பொருளாதார ரீதியான இலாபங்கள் காணப்படாத விடத்து அல்லது பொருட்களின் | அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றேன். 2021 ஆம் ஆண்டின் பெறுகை செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது இக்குறைபாடுகளை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் | பெறுகை சட்டங்கள், விதிகள் பிரமாணங் களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விலைகளில் குறைவுகள் ஏற்படாத விடத்து ஆரம்ப ஒப்பந்தத்தின் 50 வீதமான பொருட்களை மீள் கொள்வனவுக்கென விலைமனுக் கோரல் இன்றி நேரடியாக கொள்வனவு செய்யலாம். எனினும் 10 கியூப் மணல், 20 கியூப் சிப்ஸ், 15 கியூப் யுடீஊஇ 100 மூடை சீமெந்து என்பவற்றுக்கான விலைமனுக் கோரல் கோரப்பட்டிருந்த நிலையில் மீண்டும் எவ்வித விலைக்கோரல்களும் கோரப்படாது. ரூபா 2,470,000 பெறுமதியான 682 சீமெந்து மூடைகள், 150 கியூப் ABC, மற்றும் 30 கியூப் மணல் என்பவற்றை கொள்வனவு செய்வதற்கான பெறுகை விதிக்கோவையின் நியதிகளுக்கு மாற்றமான முறையில் வழங்கப்பட்டிருந்தது.அத்தோடு பதிவு செய்யப்படாத வழங்குனர்களிடமிருந்து ரூபா 50,000 பெறுமதியான சீமெந்து மூடைகளும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | | |
| (ஈ) | பதிவு செய்யப்பட்ட 12 டயர் வழங்குனர்கள் இருக்கும் போது இயந்திரப் பிரிவுக்கான 286 டயர்களை பெற்றுக் கொள்வதற்கான விலை மனுக்கள் பதிவு செய்த 3 வழங்குனர்களிடமிருந்து உடனடியாக மாத்திரமே பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன மேலும் பதிவு செய்யப்படாத மூன்று வழங்குனர்களிடமிருந்தும் வேறு வகையான டயர்களுக்கான கூறுவிலை பெறப்பட்டிருந்ததோடு அவர்களிடமிருந்து ரூபா 2,084,396 பெறுமதியான டயர்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றேன். 2021 ஆம் ஆண்டின் பெறுகை செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது இக்குறைபாடுகளை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| உ) | ரூபா 46,280 முதல் ரூபா 1,575,000 வரையான விலைகளுக்கு உட்பட்ட 106 கொள்வனவுகளுக்கென நகர பிதாவின் மேவுகை அங்கீகாரம் பெறப்பட்டிருந்த நிலையில் நகராதிபதியினால் வழங்கப்படக் கூடிய மேவுகை அங்கீகாரத்தின் உயர் எல்லையை தீர்மானித்த நகர சபையின் கூட்ட அறிக்கையானது கணக்காய்வின் போது முன்வைக்கப்படவில்லை. | அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றேன். 2021 ஆம் ஆண்டின் பெறுகை செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது இக் குறைபாடுகளை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | சமூக அடிப்படை சங்கங்களுக்கு ஒப்பந்தங்களை வழங்குகின்ற போது அரசின் நோக்கம் குறித்த பிரதேசத்தில் வேலை வாய்ப்புகளை உருவாக்கி பிரதேசத்தின் வளர்ச்சியை மேம்படுத்தலாக இருந்த போதும், 2012 ஜனவரி மாதம் 5 ஆம் திகதியி 01/2012 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்திக்கு இணங்கான முறையில் ரூபா 3.6 மில்லியன் பெறுமதியான நுவரெலியா முன்னோடி கடைத்தொகுதி முகப்பினை மாற்றி அமைக்கும் செயற்திட்டமானது தலா 1.8 மில்லியன் ரூபா பெறுமதியான இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டடு இரு சமூக அடிப்படை சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் குறித்த இரு சமூக அடிப்படையிலான சங்கங்களும் குறித்த திட்டத்தினை செயல்படுத்த மற்றொரு தனியார் கம்பனிக்கு உப ஒப்பந்த அடிப்படையில் வழங்கியிருந்தன. | அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றேன். 2021 ஆம் ஆண்டின் பெறுகை செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது இக் குறைபாடுகளை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.8. ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சந்ததென்ன இரண்டாம் ஒழுங்கையின் பாதை அபிவிருத்தி பணிகள் 2019 திசெம்பர் மாதம் 16 ஆம் திகதி முதல் 2020 மார்ச் 11 | மார்ச் 5 மற்றும் 10 ஆந் திகதிகளில் மாதிரி பெறப்பட்டுள்ளன. | அனைத்து நிர்மாண வேலைகளும் தாமதமின்றி தரப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | வரை நிறைவேற்றப் பட்டிருந்த போதும் 2020 மார்ச் மாதம் பெற்றுக் கொள்ளப்பட்ட கொங்கிரீட் மாதிரியின் ஆய்வுக்கூட அறிக்கையை அடிப்படையாக கொண்டு ரூபா 3,362,267 கொடுப்பனவாக செலுத்தப்பட்டுள்ளது. | | |
| (ஆ) | குறித்த திட்டத்தின் ஆரம்பம் முதல் இறுதி வரை தினமும் மேற் கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் குறித்த திட்டத்தை மேற்பார்வை செய்யும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் / பொறியியலாளர்களினால் மேற்கொள்ளப்படும் தினசரி களப் பரிசோதனைகள், குறித்த திட்டம் தொடர்பில் வழங்கப்படும் ஆலோசணைகள் குறித்தான சம்பவப் பதிவேடு பேணப்பட வேண்டும். ஆயினும் தெரிவுச் சோதனை மேற்கொள்ளப்பட்ட ஆறு திட்டங்களிலும் குறித்த சம்பவப் பதிவேடுகள் காணப்படவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் | உரிய வகையில் சம்பவப் பதிவேடு பதிவுகள் பேணப்பட வேண்டும் |

### 3.9 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிரந்தர நியமனமானது அந்த ஊழியர்கள் சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்த பதவிகளுக்காக மாத்திரமாக இருந்த போதும் 14 தொழிலாளர்களாக சேவை புரிந்தவர்களில் 13 பேரை சாரதிகளாகவும் ஒருவரை ஒட்டுவிப்பாளர் பதவிக்குமாக நிரந்தரமாக்கப்பட்டதால் அந்த 14 பதவிகளுக்காக மீள் நிரப்பப்பட முடியாதிருந்த தொகை ரூபா 8,135,888 ஆக இருந்தது. | இப்பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கு மத்திய மாகாண தலைமை செயலாளரால் முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு 2020 ஆகஸ்ட் 10 ஆந் திகதி எழுத்துமூலம் அறிவித்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அந்த அங்கீகாரம் கிடைத்தவுடன் அடுத்த நடவடிக்கைகளை எடுப்பதாக | பொருத்தமான நடைமுறைகளை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் சிக்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உக்காத கழிவுகளை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தத்தைப் பெற்றிருந்த ஒப்பந்தக்காரர் பிளாஸ்டிக் போத்தல்களை மாத்திரமே கொள்வனவு செய்தமையினால் சேகரிக்கப்பட்ட பைபர், ரெஜிபோம், இலத்திரனியல் கழிவுகள், பச்சை மற்றும் பழுப்பு நிற கண்ணாடி போத்தல்கள் அடங்கலான 12,500 கிலோ கழிவுகள் கழிவுப்பொருள் சேகரிப்பு மத்திய நிலையத்தில் தேங்கிக் காணப்பட்டன. | கொரோனா தொற்றுடன் மீண்டும் அப்பொருட்களின் சேகரிப்பு தாமதமடைந்துள்ளதால் குறித்த பொருட்கள் அவ்வாறு தேங்கிக் காணப்படுகின்றன. | கழிவுப்பொருள் முகாமைத்துவம் முறையாக நிறைவேற்றப்பட வேண்டும். |
| (ஆ) | உக்காத கழிவுப் பொருட்களான பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை துண்டுகளாக்கி இயந்திரங்களை கொண்டு அரைத்து மூலப்பொருளாக விற்பனை செய்வதற்கான திட்டமொன்றை திட்டமிட்டிருந்த போதிலும் பொருத்தமான கொள்வனவாளர்களை கண்டறிவதில் மாநகர சபையானது போதுமான செயற்பாடுகளை மேற்கொள்ளத் தவறியிருந்தது. | கொரோனா தொற்றுடன் மீண்டும் அப்பொருட்களின் சேகரிப்பு தாமதமடைந்துள்ளதால் குறித்த பொருட்கள் அவ்வாறு தேங்கிக் காணப்படுகின்றன. | கழிவுப்பொருள் முகாமைத்துவம் முறையாக நிறைவேற்றப்பட வேண்டும். |
| (இ) | அரைக்கப்படும் பொலித்தீனை கொள்வனவு செய்வதற்கென கொள்வனவாளர்கள் எவரும் முன்வராமை காரணமாகவும், உற்பத்தி செய்யப்படும் பூந்தொட்டிகளை விற்பனை செய்வதற்கு போதியளவான வேலைத் திட்டங்களின்மை காரணமாகவும் 2017 ஜூலை மாதம் முதல் எவ்வித பொலிதீன் அரைத்தல் செயற்பாடுகளும் நடைபெறவில்லை என்ற விடயம் வெளிப்படுத்தப்பட்டது. இதனால் பொலித்தீன் அரைக்கும் இயந்திரம் செயலற்ற நிலையில் காணப்பட்டது. | எதிர்காலத்தில் அது தொடர்பில் கூடுதலான பிரச்சாரத்தை வழங்கி கொள்வனவாளர்களை அதிகரித்துக்கொள்வதற்கு நவடிக்கை எடுப்பேன். | கழிவுப்பொருள் முகாமைத்துவம் முறையாக நிறைவேற்றப்பட வேண்டும். |